**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 946 of 2025

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : சம்பூர்ணா

Father's Name : க/பெ. சசிக்குமார்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of January** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்பொழுது பீடம்பள்ளியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். 04 ம் தேதி 10 வது மாதம் வருடம் ஞாபகம் இல்லை. சுமார் 3 வருடத்திற்கு முன்பாக பகம் 02 நானம் லட்சும் என்பவரும் நடுபபாளையத்தில் உள்ள திண்டுக்கல் தோட்டத்தில் வேலை செய்துவிட்டு மதியம் 02.45 மணியளவில் ஜோசப் என்பவரின் வீட்டின் அருகே வந்து கொண்டிருந்தபோது எதிரி இருசக்கர வாகனத்தில் வந்து என் கழுத்தில் அணிந்திருந்த 1-½ செயினை பறித்து கொண்டு வேகமாக சென்று விட்டார். பின்னர் நான் சூலூர் காவல் நிலையம் வந்து எனது செயினை மீட்டு தக்க நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன். புகார் **அ.சா.ஆ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் என்னுடைய செயின் கிடைத்துவிட்டதாக கூறியதன் பேரில் நான் காவல் நிலையம் சென்று எனது செயினை அடையாளம் காண்பித்தேன். புகைப்படத்தில் உள்ள தங்கச் சங்கிலியை தான் நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். புகைப்படம் **அ.சா.பொ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் காட்டு வேலை செய்து வருகிறேன். பொதுவாக என்னுடைய வேலை எத்தனை மணியிலிருந்து எத்தனை மணி வரை இருக்கும் என்றால் 8 மணிமுதல் 2 அல்லது 2.30 வரை இருக்கும். என்னுடைய வீட்டிற்கும் நான் வேலை பார்த்து கொண்டிருந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் 1-½ மைல் இருக்கும். பொதுவாக அவ்வழியாக வாகனங்கள் அதிகளவு செல்லும் பகுதி என்றால் சரியல்ல. ஓளரவு மட்டுமே வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் செல்வார்கள். மேற்படி சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் பகுதி வீடுகள் மற்றும் கடைகள் உள்ள பகுதி என்றால் சரிதான்.

2. அவ்வழியாக ஏதேனும் அசம்பாவிதங்கள் நடந்தால் அருகில் இருப்பவர்கள் பார்ப்பதற்கும் வருவதற்கும் வாய்ப்பு இருக்கும் என்றால் சரிதான். நாங்கள் காவல் நிலையம் எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் அன்றைய தினமே 8 முதல் 9 மணிக்குள்ளா சென்றோம். புகாரை நான் இரவு 9 மணிக்கு தான் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். நான் அளித்த புகாரில் என்ன வகையான செயின் அணிந்திருந்தேன் என குறிப்பிட்டு புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அளித்த புகாரில் நான் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி வந்தேன் என்றும், இருசக்கர வாகனத்தில் வந்தவரும் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. புகாரினை நான் எழுதவில்லை எனது உறவினர் எழுதிகொடுத்தார். அவருடைய பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. நான் தகவல் சொல்லி எனது உறவினர் காவல் நிலையம் வந்தாரா என்றால் காவல் நிலையத்தில் கூட்டமாக இருந்தார்கள். அவர்களில் ஒருவர் புகாரினை எழுதி கொடுத்தார். சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. போலீசார் சொல்லி கொடுத்ததன் பேரில் பொய்யான புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் வழக்கு சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.01.19 17:55:20 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**